# 62. தமிழ் நாவலின் வரலாறும் தன் வரலாற்று நாவலின் தோற்றமும்

க.கௌசல்யா தேவி
முனைவர் பட்ட ஆய்வாளர்
நெறியாளர் முனைவர் ம. பிரகாஷ்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை – 600117.

## முன்னுரை

தமிழ் இலக்கிய மரபு தொன்மையான வரலாற்றை உடையது. சமூக மாற்றத்திற்கு ஏற்ப வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் காலத்திற்கு காலம் மாற்றங்களை பெற்று வளர்ந்து செழித்து இன்றளவும் சிறப்புடன் திகழ்வது. பன்னெடுங்காலமாக செய்யுள் நடையையே இலக்கிய வழக்காக தகவமைத்துக் கொண்ட தமிழ் இலக்கிய மரபில் ஆங்கிலேயர் வரவால் ஏற்பட்ட உரைநடை பல்வேறு ஆக்கக்கூறுகளைக் கொண்ட மிக முக்கியமான மாற்றங்களை நிகழ்த்தி இருக்கின்றது. செய்யுளிலில் இருந்து புனை கதைக்கு, புதினம், சிறுகதை வடிவங்களுக்கு, உரைநடைக்கு மாறிய இம்மாற்றம் வரவேற்கத்தக்கதாகவும் இன்றியமையாத மாற்றமாகவும் அமைந்தது. உரைநடையை படைப்பிலையத்திற்கு பயன்படுத்தி ஏராளமான நாவல்கள் வெளிவர துவங்கின. தமிழக நாவல் வரலாற்றை உரைநடையின் வளர்ச்சியோடும், அச்சுப் பண்பாட்டோடும், பத்திரிகைகளின் பெருக்கத்தோடும் தொடர்புபடுத்திய காணவேண்டி உள்ளது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியதாக கருதப்படும் நாவல் இலக்கியம், பல்வேறு வகை மாதிரிகளில் பல்கிப் பெருகின வரலாற்று நாவல்கள், துப்பறியும் நாவல்கள், வட்டார நாவல்கள், தழுவல்கள் என ஏராளமாக வெளிவந்துள்ளன. மேலைநாட்டு கோட்பாடுகளின் அறிமுகம் தமிழ் நாவலில் பல புதிய திருப்பங்களை உருவாக்கின. அதன் காரணமாக மாக்சிய நாவல்கள், பெண்ணிய நாவல்கள், தலித்திய நாவல்கள், பின்னவினத்துவ நாவல்கள், அறிவியல் புனை கதைகள், திராவிட நாவல்கள், இனவரவியல் நாவல்கள், உளவியல் நாவல்கள் என பல்வேறு கருத்தியல் அடிப்படையில் நாவல்கள் வகைப்படுத்தப்பட்டன. வரலாற்று நாவல்களில் தன் வரலாற்று நாவல்கள் மிக முக்கியமானவை. வட்டார பண்புடனும் எதார்த்த தன்மையுடனும் இந்நாவல்கள்

படைக்கப்பட்டன. தன்னுடைய வரலாற்றை தானே அழகியல் நுட்பத்தோடும் புனைவாக்கத் திறனோடும் இலக்கிய வடிவமாக எடுத்துரைப்பது தன் வரலாற்று நாவலாகும். அந்த வகையில் தன் வரலாற்று நாவல்கள் ஒரு முக்கிய இலக்கிய வடிவமாக பரவலாக்கம் பெற்றுள்ளன. இவ்வியல் தமிழ் நாவல் எழுந்த சூழல்களையும் அவற்றுள் தன் வரலாற்று நாவல் பெறும் இடத்தையும் ஆராய்வதாக அமைகிறது

**நாவல் – விளக்கம்**

நாவல் அல்லது புதினம் என்பது, வாழ்க்கையையும் நிகழ்வுகளையும் கற்பனையாகவும், உரைநடையாகவும் விவரிக்கும் ஒரு நீண்ட இலக்கியப் படைப்பாகும். கதை கூறும் இலக்கிய வகையுள் ஒன்றாக நாவல் அல்லது புதினம் விளங்குகின்றது. பெரிய கதை ஒன்றினை உரைநடையில் கூறும் இலக்கியமாக இது அமையும்.

இடைக்காலத்தில் ஐரோப்பாவில் வீரதீரச் செயல்களையும், காதலையும் கூறும் கதைகள் நிறைய எழுதப்பட்டன. ஆனால் இக்கதைகளும் கவிதை வடிவிலேயே தோன்றின. 13ஆம் நூற்றாண்டில் இத்தாலிக் கலைஞர்கள் நூவேல் என்னும் பெயர் கொண்ட பல கதைக் கொத்துக்களை வெளியிட்டனர். இவை கவிதை வடிவில் வெளிவந்தவை. பிற்காலத்தில் உரைநடையின் வாயிலாகக் கதை சொல்லும் மரபு ஏற்பட்டதும் இதுவே நாவல் எனும் புதிய இலக்கிய வகை தோன்றப் பின்புலமாக அமைந்தது என்பர்.

இத்தாலியில் தொடக்கத்தில் நாவல்லா (Novella) என்று அழைக்கப்பட்டதே, பின்னர், நாவல் என்று அழைக்கப்பட்டதாக ஆக்ஸ்போர்டு ஆங்கில இலக்கிய அகராதி கூறுகிறது. மேலும் அந்த அகராதி, உரைநடையில் கதை கூறுவதே நாவல் என்றும் கூறுகிறது. கிளாரா ரீவி என்பவர் 'எழுதப்பட்ட காலத்தின் உண்மையான வாழ்க்கையினையும், வாழ்வின் பழக்க வழக்கங்களையும் வெளியிடும் ஓவியம்தான் நாவல்' என்று கூறுகிறார். 'குறிப்பிடத்தக்க ஒரு செய்தியைப் பற்றியதாகவும், மாந்தர்களையும் ஆழ்ந்த நோக்கினையும் அடித்தளமாக உடையதாகவும் உரைநடையில் அமைகின்ற புனைகதை தான் நாவல்' என்று, சேம்பர் கலைக்களஞ்சியம் (Chamber's Encyclopedia) கூறுகின்றது.

உரைநடையில் அமைந்த, குறிப்பிடத்தக்க அளவில் நீண்ட கதையே நாவல் என்றும், அது படிப்பவர்களை ஒரு கற்பனையான உண்மை உலகிற்கு அழைத்துச் செல்கிறது என்றும், படைப்பாளன் உருவாக்கியதால் அந்த உலகம் புதியது என்றும் காதரீன் லீவர் தம்முடைய நாவலும் படிப்பாளியும் என்ற நூலில்

கூறுகிறார். தமிழில் முதன் முதலில் நாவல் முயற்சியில் ஈடுபட்ட தமிழறிஞர்களும் நாவல் பற்றிய தத்தம் கருத்துகளைத் தெளிவுபடுத்தியுள்ளனர். ஆதியூர் அவதானி சரிதம் எழுதிய தூ.வி.சேஷய்யங்கார் தம் நாவல் முன்னுரையில்,

**'இது பொய்ப் பெயர்ப் பூண்டு மெய்ப்பொருள் காட்டும்'**

என்று குறிப்பிடுகின்றார். மாயூரம் வேதநாயகம் பிள்ளை தம்முடைய பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் நாவலின் முன்னுரையில் நாவலை வசன காவியம் (Prosaic Epic) என்ற பெயரில் குறிப்பிடுகின்றார்.

**தமிழ்ச் சமூகத்தில் நாவல்**

தமிழ்ச் சமூகத்தில் நாவல் என்ற கலை வடிவம் தோன்றி, நிலைபெற்ற காலகட்டத்தில் அதற்கு வழங்கப்பட்ட பல்வேறு பெயர்களில் நவீனம், நவீனகம், புதினம் - 'வசன காவியம்' என்பதும் குறிப்பிடத்தக்கது.

கி.பி. 18ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இருந்தே ஆங்கிலேயர் ஆட்சி இந்திய மண்ணில் கால்கொள்ளத் தொடங்கியது. ஆயினும், மேற்கத்திய நாகரிகம், இந்திய மண்ணின் அடிவரை சென்று வேர்கொள்ளச் சிலகாலம் பிடித்தது. இதனால் உடனடியாக ஏற்பட்ட விளைவுகளுள் ஒன்று உரைநடையில் ஏற்பட்ட அளப்பரிய வளர்ச்சி ஆகும். தமிழில் பழங்காலந்தொட்டே உரைநடை இருப்பினும், படைப்பிலக்கியத்திற்கு உரைநடையைப் பயன்படுத்தும் பாங்கு, வெள்ளையர் வர விற்குப் பின்பே தோன்றியது. தொழிற் புரட்சிக்குப்பின் இயந்திர வசதிகள் பெருகத் தலைப்பட்டன. போக்குவரத்து வசதிகளும், தந்தி, அஞ்சல் போன்ற தொடர்புச்சாதனங்களும் இம் மண்ணில் நிறுவப்பட்டன அச்சு இயந்திரங்கள் பெரு இன செய்தி இதழ்கள் தொடர் வருகை புரிந்தன.

கிறித்தவப் பாதிரிமார்கள் தங்கள் சமயப் பிரச்சாரத்திற் சென்று உரைநடையைக் கையாண்டு துணடுப் பிரசுரங்களை வெளியிட்டனர். அச்சு இயந்திரங்களின் பயன்பாடு பெருகத் கலைப்பட்டன. உரைநடையைப் புனைகதை இலக்கியத்திற்கு, படைப்பிலக்கியத்திற்கு வீரமாமுனிவர் பயன்படுத்தி வழிகாட்டினார். அவருடைய பரமார்த்தகுருகதை இவ்வகையில் குறிப்பிடத்தக்க முயற்சி. ஆங்கிலக் கல்வி வேகமாகப் பரவியது. ஆங்கிலக் கல்வி பெற்ற வாசகர் கூட்டம் ஒன்று புதிதாக ஏற்பட்டது. ஆங்கில ஆட்சி முறையாலும் ஆங்கிலக் கல்வியாலும் விழிப்புணர்வுபெற்ற மத்தியதர வகுப்பாரிடையே நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் பெருகத் தலைப்பட்டன. ஆங்கிலம் போன்ற மேனாட்டு மொழிகளில் காணப்பட்ட புதிய இலக்கிய

வடிவங்களான புதினம், சிறுகதை என்னும் புனை கதை வகைகள் இவர்களைக் கவர்ந்தன. ஆங்கிலக் கல்வியால் விழிப்புணர்வு பெற்றோர் புனை கதை வடிவங்களைத் தத்தம் மொழிகளிலும் படைக்கத் தலைப்பட்டனர். இவ்வாறு, தமிழில் புதினமும் சிறுகதையும் தோன்றின கதை கூறும் பாங்கு பழையமரபு என்றாலும் புதினம். சிறுகதை என்ற இலக்கிய வடிவங்கள் புதியன. கவிதையில் இருந்து புனைகதைக்கு -புதினம், சிறுகதை வடிவங்களுக்கு உரைநடைக்கு - மாறிய இம்மாற்றம் தமிழ் இலக்கிய உலகில் நிகழ்ந்த இன்றியமையாத மாற்றம் ஆகும். இதனைப் படித்த மக்கள் கூட்டம் வரவேற்று ஏற்றது. இவ்வாறு, புதினம், சிறுகதை தோன்றிப் பெருகின. இதழ்களும் இவற்றை மிகுதியும் வெளியிடத் தலைப்பட்டன.

தமிழில் முதல் புதினம் 1976ஆம் ஆண்டில் பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் பெயருடன் வேதநாயகம் பிள்ளை யால் படைக்கப்பட்டது. தம் படைப்பை அவர் வசன காவியம் என்றே கூறுகிறார். அறிவூட்டல், மகிழ்வூட்டல் என்னும் இரு நோக்கங்களை மையமாகக் கொண்டு அவர் முதல் புதினத்தை வெளியிட்டார். அன்றைய சமூக வாழ்வின் பல்வேறு நிலை களை இந்நாவலில் காணலாம். அரசன் - அரசி கதைப்பாங்கில் இந்நாவல் அற்புத நவிற்சிப் பாங்கில் அமைத்துள்ளது. இந்நாவல் நேரடியாக நாவலாகப் படைக்கப்பட்டது

1896 ஆம் ஆண்டில் வெளிவந்த ராஜமையரின் கமலாம்பாள் சரித்திரம் அடுத்த இடத்தைப் பெறுகிறது. இப்புதினம் விவேக சிந்தாமணி' இதழில் 1893-1895 ஆம் ஆண்டுகளில் தொடர்கதையாக வெளி தொடர்கதையாக வெளிவந்தது. வந்து, புதினமான முதல் தமிழ்ப் படைப்பு இதுவே. தத்துவம் தமிழ்ப் புதினத்தில் கலந்துவரும் பாங்கு கிராமப் பின்னணி வட்டாரப் புதின வகை. பேச்சுமொழி வழக்கு ஆகிய தன்மை களுடன் நடப்பியல் பாங்கு மிக்க படைப்பு என்ற வகையிலும் கமலாம்பாள் சரித்திரம் தமிழ்ப் புதின வரலாற்றில் முதல் படைப்பு ஆகும். மாதவையாவின் பத்மாவதி சரித்திரம் 1898இல் வெளிவந்தது. சமுதாயச் சீர்திருத்தப் புதினம் என்ற வகையில் பத்மாவதி சரித்திரமும் முத்து மீனாட்சியும் குறிப்பிடத்தக்கவை பண்டித நடேசசாஸ்திரியின் தீனதயாளு அலுவலக வாழ்க்கை நிலையைக் கூறும் முதல் தமிழ்ப் புதினம். இவருடைய திக்கற்ற இரு குழந்தைகள் புதினத்தில் சமூகத் துப்பறியும் தன்மையைக் காண்கிறோம்.

அரசியல் பின்னணியில் கிராமச் சீரமைப்பு, நாட்டு விடு தலைப் போராட்டம் ஆகியவற்றைக் கருவாகக் கொண்டு கா. சீ. வேங்கடரமணி

புதினங்களைப் படைத்தார். அவ குடைய முருகன் ஓர் உழவன், தேசபக்தன் கந்தன் ஆகியன குறிப்பிடத்தக்கன. இதனையடுத்து, தமிழ்ப் புதினத்துக்கு வளஞ் சேர்த்தவர் கல்கி எண்ணற்ற வாசகர் கூட்டத்தைச் சென்றடையும் வண்ணம் புதினத்தை இவர் படைத்தார். நாட்டு விடுதலை, சமூக மாற்றம், சீர்திருத்தம் ஆகியன இவரது புதினங்களில் வலியுறுத்தப்பட்டன. தமிழ் நடையின் எளிமையையும் இனிமையையும் ஒருங்கே புலப்படுத்தியவர் கல்கி. சமூகப் புதினங்களுடன் வரலாற்றுப் புதினங்களையும் கல்கி படைத்தார். இன்றும் தமிழில் வரலாற்றுப் புதினம் எழுது பவர்கள் கல்கியின் போக்கையே பின்பற்றுகின்றனர். தமிழில் நகைச் சுவையுடன் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைப் புதி னங்களில் வெளியிட்டவர்களுள் கல்கி குறிப்பிடத்தக்கவர். இதே வரிசையில் தேவன். எஸ். வி.வி., தி.ஜ.ர கொத்த மங்கலம் சுப்பு போன்றோர் அமைவர். இன்று தமிழில் நகைச் சுவையுடன் எழுதும் எழுத்தாளர்களைக் காண்பது அரிது.

நாட்டு விடுதலைக்குப்பின் எழுத்தாளர்கள் சமூகச் சீர் திருத்தம், தனி மனிதனின் சிக்கல்கள் போன்றவற்றை மிகுதி யும் புதினங்களுக்குக் கருப்பொருளாக்கினர். எனவே இவர் களின் புதினங்களில் சமுதாய இயல், உளவியல் போன்ற பிற துறைச் செய்திகள் இடம்பெறலாயின. வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கித் தாம்பெற்ற அனுபவங்களுடன் புதினங்களைப் படைத்தனர்.

புதினம், கருப்பொருளான உள்ளடக்கத்தில் மட்டுமின்றி, கதை கூறும் முறையிலும், கதை அமைப்பு நிலையிலும் புதுப்புதுக் கோலம் கொண்டது.வரா நாரணதுரைக் கண் ணன், அகிலன், கோ. வி. மணிசேகரன், மு.வரதராசன், கு, இராசவேலு, க நா. சுப்பிரமணியன். சிதம்பர சுப்பிர மணியன். எம்.வி. வெங்கட்ராம். தி. ஜானகிராமன். லா ச.ரா., ஜெயகாந்தன், ஜெகசிற்பியன், சாவி, சோமு. ஆர். வி இந்திரா பார்த்தசாரதி. சி.சு.செல்லப்பா, ரகுநாதன், நா.பார்த்தசாரதி, லெட்சுமி, சூடாமணி, நீல. பத்மனாபன், ஆர்.சண்முகசுந்தரம், ஹெப்சிபா ஜேசுதாசன், சுந்தர ராம சாமி, ஜெயந்தன், சு.சமுத்திரம் போன்றோர் குறிப்பிடத்தக்க இக்காலப் படைப்பாசிரியர்கள்

இராஜம் கிருஷ்ணன் தமிழ்ப் புதின உலகில் புதிய புதிய கருப்பொருள்களையும். புதிய புதிய பின்னணிகளையும் கொண்டு புதினங்கள் படைப்பவர். ஒவ்வொரு புதினத்துக்கும் கள ஆய்வு மேற்கொண்டு பெண்களின் வாழ்க்கைச் சிக்கல் களைச் சமுதாய, உளவியல் நோக்குகளில் படைத்து வருபவர் இவர்

பொதுவாக, தமிழ்ப்புதினம் பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்றுள்ளது. சமுதாய தனிமனிதச் சிக்கல்களுக்குத் தீர்வு காணக் காந்தியம், பொதுவுடமை, பகுத்தறிவு இயக்கம் ஆகி யன துணைசெய்யும் என்று பல்வேறு நெறிகளைக் காட்டும் புதினங்கள் பெருகலாயின. இவற்றுடன் அறிவியல், உள வியல், வட்டாரவியல், நனவோடை, புதுக்கவிதை, வசன கவிதை, கற்பனை உலகம், துப்பறியும் பாங்கு. அரசியல் சமூக வாலாறு. இன வரலாறு, குடும்பச் சிக்கல், தனிமனிதச் நீக்கல், அலுவலகச் சிக்கல், குழந்தை உளவியல், பெண்ணெ மூச்சி என்று பல்வேறு வகைகளாகத் தமிழ்ப் புதினம் வளர்ச்சி பெற்றுள்ளது.

தமிழ்ப்புதின வளர்ச்சிக்குத் துணைநிற்பன இதழ்கள், வாசகர் கூட்டம், வெளியீட்டகம், இதழ்கள் நடத்தும் போட்டிகள், அரசு - தனியார் - நல்கும் பரிசுகள் போல்வனவாகும். அண்மைக்காலத்தில் மாத வெளியீடுகளாகவும், மலிவு விலைப் பதிப்புக்களாகவும் புதினம் பெருகி வளரத் தலைப்பட்டுள்ளது. இவையேயன்றி, புதின ஆசிரியர்கள் தாமே, பதிப்பகங்கள் வழியே நேரிடையாகப் புதினங்களை வெளியிட்டு வருகின்றனர். பொதுவாக, வாசகர்களுக்குப் பொழுதுபோக்கை நல்க வேண் டும் என்ற ஒரே நோக்கில் புதினம் படைப்பவர்களே இன்று மிகுதி இதழ்களின் அசுரவளர்ச்சியில் படைப்பாளர் பலர் படிப்பவரின் சுவையுணர்வை இழிநிலைக்கு இறக்குகின்ற போக்கும் இன்று காணப்படுகிறது. இதன் விளைவாகப் பாலுணர்வைத் தூண்டும் புதினங்கள் பெருகியுள்ளன. கால வெள்ளத்தில் இவை கரையேறிச் செல்லா. எனினும் படிப்பவரின் சிந்த னையை மழுங்கச் செய்யும் புதினங்களில் கலைத்தன்மை யையோ. கருப்பொருள் ஆழத்தையோ காணமுடியாது. இருப்பினும் ஆங்காங்கு இதழ்களின் வழியேயும் நேரடியாக வும் தரமிக்க நல்ல புதினங்கள் வந்துகொண்டுள்ளன.

பல்கலைக்கழகங்களில் அண்மைக் காலங்களில் ஆய்வுப் பொருளாகத் தமிழ்ப் புதினங்கள் அமைகின்றன.சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதன்முதலில் தமிழ்ச் சமூகப் புதினங்கள் பற்றி ஆய்வு நிகழ்த்தப் பெற்றது. பின் மற்ற பல்கலைக் கழகங்களில் மிகுதியும் ஆய்வு நிகழ்த்தப்பட்டது.

**நாவலின் தோற்றமும் வகைகளும்**

'கவிதையின் கற்பனை அழகுகளையும், உணர்ச்சி வெளிப்பாடுகளையும் உரைநடையில் கொண்டுவர முடியும் என்று உணர்த்தப்பட்ட பிறகு, தமிழ் உரைநடைப் படைப்பிலக்கியத்தில் முதலில் தோன்றியது நாவல் இலக்கியமே' என, இரா.தண்டாயுதம் கூறுகிறார்.

**நாவலின் வகைகள்**

நாவல்களைப் பொதுவாக இருபெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம். (1). சமூக நாவல் (2) வரலாற்று நாவல் என்று நாவலின் கதைப் பின்னணி அடிப்படையில்தான் இப்பிரிவுகள் அமைகின்றன. ஒரு குறிப்பிட்ட காலச் சூழலில் சமூகத்தில் மக்களுக்குள் உணர்வு அடிப்படையில், வாழ்வு அடிப்படையில் ஏற்படும் சிக்கல்களைச் சமூக நாவல்கள் பாத்திரங்கள் வாயிலாக வெளிப்படுத்துகின்றன. காதல், வறுமை, பொருளாதாரச் சிக்கல்கள், சாதியச் சிக்கல்கள், மத அடிப்படைச் சிக்கல்கள் முதலியவற்றைச் சமூக நாவல்கள் புலப்படுத்தக் கூடும். ஒரு படைப்பாளி, தான் வாழும் சமூகத்தில் கண்ட, கேட்ட, அனுபவித்த இன்பமான அல்லது சோகமான முடிவுகளைக் கொண்ட செய்திகளைச் சற்றுக் கற்பனையை இணைத்துச் சமூக நாவல்களாகப் படைப்பர். சமூக நாவல்களில் வரும் கதைப் பாத்திரங்களின் பெயர் மட்டும் கற்பனையாக இருந்து கதை உண்மையாக நடந்த நிகழ்ச்சியாக இருக்கக் கூடும். சமூக நாவல்களைப் பண்பு அடிப்படையில்

(1) நடப்பியல் நாவல் (2) போலி நடப்பியல் நாவல் என்று பிரிப்பர். இந்த அடிப்படையில் சமூக நாவல்களைப் பிரித்தால் நாவலில் நடப்பியல், நடப்பியல் போல் கற்பனையும் அமைந்திருப்பதாக ஏற்றுக் கொள்ளலாம். நாவல்களைக் கீழ்க்கண்ட முறையில் மேலும் பிரித்துக் காண்பர் ஆய்வாளர்கள்: (1) வட்டார நாவல் (2) குடும்ப நாவல் (3) சமுதாய நாவல் (4) குறுநாவல் (5) பெரு நாவல் (6) புதுமை நாவல் (7) உளவியல் நாவல் (8) ஆன்மிக நாவல் (9) துப்பறியும் நாவல் இவ்வாறு வகைப்படுத்தினாலும் இன்னும் மார்க்சிய நாவல், அறிவியல் நாவல், அங்கத நாவல், கடித நாவல், பின் நவீனத்துவ நாவல் என்றும் பிரிப்பது உண்டு.

**தன்வரலாற்று நூல்கள்**

வரல்+ஆறு. என்ற இரு சொற்களின் கூட்டுச்சொல்லே வரலாறு என்பதாகும். ஆறு என்ற சொல்லுக்கு 'வழி என்பது பொருள் வந்த வழி அல்லது கடந்து வந்த வழி என்ற பொருளிலேயே வரலாறு என்னும் சொற்பதம் ஆளப்பட்டு வருகிறது.

தனிமனிதர்களை மையப்படுத்தியே வரலாறு என்பது சொல்லப்பட்டு வந்த நிலைமை முற்றிலும் மாறி, குறிப்பிட்ட காலகட்டம் நிகழ்வுகள், அமைப்புகள் ஆகியவற்றைக் குறித்தும் வரலாறு பேசத்தொடங்கி இருக்கிறது

வரலாற்று நாயகர்களாக விளங்கியவர்களின் வரலாறு மட்டும் வரலாறல்ல; சாமானிய மனிதர்களின் வரலாறும் வரலாறே என்ற புரிதல் வரலாற்றுக் களத்தில் ஏற்பட்டுள்ளது. தனியொரு மனிதர் தன்னுடைய வாழ்வையும், தன்னுடைய இருப்பையும் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியதன் வெளிப்பாடாகவே தன் வரலாற்று நூல்கள் தோன்றின எனலாம்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் சி.சுப்பிரமணிய பாரதியார் தனது சுயசரிதையினைக் கவிதை வடிவில் வெளியிட்டார். அவரால் சுயசரிதை வெளியிடப்பட்ட ஆண்டு 1910 ஆகும். நாற்பத்தொன்பது பாடல்களைக் கொண்ட அவரது சுயசரிதை, அவரது வாழ்க்கையின் போக்கினையும் துன்பங்களையும் தொகுத்துரைக்கிறது.

**காவ்யா சண்முகசுந்தரத்தின் தன்வரலாற்று நாவல்கள்**

கதை கவிதை தாடம், நாவல் வடியங்களின் தனது இலக்கிய முயற்சிகளை மேற்கொண்டு வரும் சுந்தரபாண்டியன் என்ற காவ்யா முனைவர்.சு.சண்முகசுந்தரம் தனித்தன்மை மிகுந்த ஐந்து நாவல்களை எழுதியுள்ளார். அவை அசலான தமிழ்நாட்டின் வரலாற்றுப் பின்னணியில் தனியொருவர் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை வடிவமைத்துள்ளார். ஒருவர் தன் வாழ்க்கையைத் தொகுத்துப் பார்த்துக்கொள்வது என்பது ஒரு முக்கியமான செய்தி. ஒரு கோணத்தில் அவர் தான் பார்த்த விருப்பு வெறுப்பில்லாமல் மதிப்பிடுகிறார். இன்னொரு கோணத்தில் அவர் தன்னைத்தானே, தன் வாழ்க்கையையே சுயமதிப்பீடு செய்துகொள்கிறார்.

சு.சண்முகசுந்தரம் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம் இருக்கத்துறை எனும் ஊரில் 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 30 அன்று பிறந்தவர். தொடக்கக் சுல்வியைக் கால்கரையிலும், உயர்நிலைக் கல்வியை வடக்கன்குளத்திலும், தமிழ் இளங்கலைப் பட்டத்தைப் பாளையங்கோட்டைப் புனித சேவியர் கல்லூரியிலும், சென்னைப் பச்சையப்பா கல்லூரியில் முதுகலைப் பட்டம் ஏ பெற்றவர். 1973-இல் நெல்லை நாட்டுப்புறப் பாடல்களை ஆராய்ந்து 1977-இல் முனைவர் பட்டம் பெற்றவர். 1981-இல் காவ்யா பதிப்பகத்தைத் தொடங்கி, இன்றுவரை நூற்றுக்கும் மேற்பட்ட நாட்டுப்புறவியல் நால்களை வெளியிட்டு வருபவர். 1936-ல் 'தன்னனானே' எனும் ஆய்விதழைத் தொடங்கினார். பல்வேறு அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கினார். ஐம்பதாண்டு காலத்திற்கும் மேலாய் நாட்டுப்புறவியல் துறையில் பங்களிப்புச் செய்து வருகின்றார். மேலும் சுந்தரபாண்டியன் எனும் புனைப்பெயரில் களவு, அம்மா,

வரம். சாபம் என்ற சிறுகதைத் தொகுப்புகளையும், கன்னடியர் மகள் திப்புசுல்தான், சாணக்கியன், ஆராரோ, அந்தி, பொருநை, கூவம்,காவேரி எனும் புதினங்களையும் மேலும், பகல்களவுகள், கதம்பம் எனும் கவிதை நூல்களையும், அந்தி என்ற நாடகத்தினையும் இயற்றியுள்ளார். இவற்றுள் 1.ஆராரோ, 1992 2. அந்தி, 1998 3. பொருநை, 2023 4. கூவம், 2023 5. காவேரி, 2024 எனும் ஐந்து நாவல்கள் இவரின் தன்வரலாற்று பகுதி பகுதியாகக் கூறும் நாவல்களாகும். இவை ஐந்தும் சேர்ந்து சண்முகசுந்தரத்தின் முழு வரலாற்றைச் சித்தரிக்கின்றது.

**முடிவுரை**

மேலைநாடுகளில் 18 ஆம் நுற்றாண்டின் இடைக்காலத்தில் தோன்றிய நாவல் இலக்கியம் தமிழகத்தில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலக் கல்வியின் விளைவாலும், அச்சு இயந்திரங்களின் புழக்கத்தாலும், பத்திரிகைகளின் பெறுக்கத்தாலும் மிக விரைவாகப் பரவலாக்கம் பெற்றன. ஆரம்பத்தில் சமூகப்பிரச்சினைகளையும் தனிமனிதச் சிக்கல்களையும் பாடுபொருளாகக் கொண்டு படைக்கப்பட்ட நாவல்கள் இடைக் காலத்தில் வணிக மைய நோக்கத்தில் பாலியல் சார்ந்தும் படித்த நடுத்தரவர்கத்தைச் சேர்ந்தவர்களுக்கான பொழுதுபோக்கு சாதனமாகவும் வெளிவந்தன. பெரும்பாலான நாவல்கள் நடுத்தரவர்க்கத்தின் குரலாகவே அமைந்திருந்தன. அதற்குப்பிறகு தீவிர வாசகப் பெருக்கத்தாலும் சமூக மாற்றத்தாலும், வெகுசன நாவல்களின் மீதான அறிஞர்களின் கடும் கண்டனங்களாலும் தரமான நாவல்கள் வெளிவரத்துவங்கின. சமூக நாவல்கள் வரலாற்று நாவல்கள், உளவியல் நாவல்கள், குடும்ப நாவல்கள் என பல வகைப்பாட்டில் நாவல்கள் வெளிவந்தன. மேலைநாட்டுக் கோட்பாடுகளின் அறிமுகத்தால் கருத்தியல் சார்ந்து நாவலிலக்கியங்கள் தோன்றின. இத்தகைய வகைப்பாடுகளுக்குள் தன்வராற்று நாவல்கள் மிக முக்கியமானவையாகும். தன்வரலாறு ஒரு இலக்கிய வடிவமாக முகிழ்க்கத் தொடங்கியது. கவிதை வடிவிலும், கட்டுரையாகவும், நாவலாகவும் எழுதப்பட்ட தன்வரலாறுகள் தமிழில் மிகுதியாயின. அவற்றில் தன்வரலாற்று நாவல்கள் மக்கிளிடையே அதிகம் வரவேற்பைப் பெற்றன. இதற்குக் காரணம் அது புனைவும் யதார்த்தமும் கொண்டு இலக்கிய நயத்தோடு எழுதப்பட்டதேயாகும். அத்தகைய எழுத்துமுறையில் காவ்யா சண்முகசுந்தரத்தின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.